# மணிமேகலை உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்

# Manimekalai's Values of Life

***க. பத்மாவதி***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை
ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**K. Padmavathi**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Srimathi Indira Gandhi College, Tiruchirappalli*

## ஆய்வு நோக்கம்

*புற்றீசல் போன்று மணிமேகலை தொடர்பான பல்வேறு ஆய்வுகள் அன்றாடம் தோன்றிய வண்ணம் உள்ளன. இருப்பினும் பாத்திரம் பெற்ற கதையில் காணலாகும் செய்திகளான பசிப்பிணி, பழம்பிறப்பு, அமுதசுரபி ஆகியவற்றைப் பற்றி விரிவாக நடைமுறை சூழலோடு ஒப்பிட்டு ஆராய்வது ஆய்வின் நோக்கமாகும்.*

## ஆய்வு சுருக்கம்

*கணிகையர்குல மாதவி தன் மகளை கற்பின் செல்வி கண்ணகியின் மகளாகவே வளர்த்தெடுக்கிறாள். மணிமேகலை வளர் இளம்பருவத்தை அடைந்ததும் பொதுவாக பெண்ணுக்குள் எழும் அத்துனை உணர்வுகளும் வரப்பெற்றவளாய் மிளிர்ந்தாலும் கண்ணகியின் மகளாகவே ஒளிர்கிறாள். இளவயதிலேயே துறவறம் பூண்டு, தன் முற்பிறப்பின் உண்மைநிலையை அறிந்து, அள்ளஅள்ள குறையாத அட்சய பாத்திரம் மூலம் மக்களின் பசித் துயரை போக்கும் அதிஉன்னத செயலை விரிவாக எடுத்தியம்பும் "பாத்திரம் பெற்ற காதையைப்" பற்றி விளக்குவது ஆய்வின் சுருக்கமாகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *கெட்ட வார்த்தை, அல்குல், குறுந்தொகை, மூலபாடம், சி.வை.தா., சௌரிப்பெருமாள் அரங்கனார், உ.வே.சா., புலியூர்க் கேசிகன், பண்பாட்டு அறக்கவலை*

## Abstract

*There are various studies related to Manimekalai. However, the purpose of the study is to examine in detail the messages found in the story of the character, such as hunger, fruit birth, and Amudhasurapi, by comparing them in detail with the practical context. Madhavi of Kanigaiyarkula raises her daughter as the daughter of Selvi Kannagi of Chastity. When Manimekalai reaches puberty, she shines as Kannagi's daughter, even though she is blessed with all the emotions that usually arise within the woman. The summary of the study is to explain the 'character-acquired ear', which becomes ascetic at an early age, knows the reality of one's previous birth, and explains in detail the noble act of alleviating the hunger and suffering of the people through the inexhaustible akshaya patra.*

***Keywords:*** *Manimekalai, Kannagi, Madhavi, Akshaya Patra, Amudhasurabhi, Values of Life.*

**Citation**

Padmavathi, K. "Manimekalai's Values of Life." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 37–44.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20096682*

**தலைப்பு அறிமுகம்**

*"மணிமேகலை உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்" என்பது இக்கட்டுரையின் தலைப்பாகும். உலகிலேயே மிகவும் கொடுமையான ஒன்று பசி என்று கூறினால் அதை மறுப்பாரில்லை. மானுட வாழ்வின் மிகப்பெரிய இடராகவும் இது கருதப்படுகிறது. இன்றுவரை தீர்க்க இயலாத ஒன்றாகவும் வலம்வந்து கொண்டிருக்கிறது. மணிமேகலை காப்பியத்தில் இடம்பெற்றுள்ள 'பாத்திரம் பெற்ற காதையில்' பசிப்பிணியின் கொடுமைகள் தெளிவாக விளக்கப்பட்டதோடு பல அற கருத்துக்கள் இன்றைய வாழ்க்கை முறையோடு நெருங்கிய தொடர்பு உள்ளதை காணமுடிகிறது. மணிமேகலை வெறும் காலத்தால் அழியாத காப்பியமாக திகழாமல் இக்காப்பியத்தில் போதிக்கப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் இன்றும் நாம் அனைவராலும் பின்பற்றக் கூடியதாகவே உள்ளன.*

**சமயம்**

*ஆதிகால மனிதன் எவற்றையெல்லாம் கண்டு அஞ்சி நடுங்கினானோ அவற்றை யெல்லாம் கடவுளாக வழிபட தொடங்கினான். இயற்கை அக்கால மனிதனின் முதல் கடவுள் ஆகும். காலங்கள் மாறமாற ஆங்காங்கே தோன்றிய முனிவர்கள், குருமார்கள் மூலம் செவிவழியாக வேதங்கள் கடத்தப்பட்டு வந்தன. அவை பிற்காலத்தில் பல்வேறு பிரிவுகளாக மாற்றம் பெற்று 'சமயம்' என்ற வடிவினை ஏற்றுக் கொண்டன. தனித்தனியே பச்சைகாய்கறிகள் இருப்பதை நாம் 'சமைத்தல்' என்னும் சொல்லால் உள் அடக்குவது இல்லை. பச்சை காய்கறிகளை நன்கு உண்ணும் பக்குவத்திற்கு மாற்றம் பெற செய்வதையே 'சமைத்தல்' என்னும் சொல்லாட்சியால் குறிப்பிடுகிறோம். அவ்வாறு நம் ஜீவாத்மா வெற்றுப்பாதையில் பரமாத்மாவோடு இணைய முடியாது. ஜீவாத்மா பரமாத்மாவோடு இணைய வேண்டுமெனில் அதற்கென பக்குவ நெறிமுறைகள் ஓதும் பற்பல முறைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பற்றி எடுத்தோதுவதை தான் 'சமயம்' என்ற வரையறைக்குள் அடக்குகின்றோம். சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்ட மணிமேகலை எனும் நூலில் 27 - ஆவது காதையான 'சமய கணக்கர் தம் திறம் கேட்ட காதையில்' உலோகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைஷேடிகம், மீமாம்சம் எனும் ஆறு வகையான சமய நெறிகளைப் பற்றிய விளக்கமான செய்திகள் காணப்படுகின்றன.அவற்றுள் பௌத்தசமயம் பற்றிய கீழ்க்காணுமாறு காணலாம்.*

**பௌத்த சமயம்**

*கிமு ஐந்தாம் நூற்றாண்டில் பண்டைய மகத நாட்டில் புத்தரின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு உதித்தது பௌத்த சமயம். மனத் துயரிலிருந்து விடுபடுவதே பௌத்த சமயத்தின் முக்கிய நோக்கமாகும். தன்னலம் துன்பங்களுக்கு எல்லாம் காரணமாக அமைகிறது. ஆசையை ஒழித்தால்தான் மன அமைதியும் ஆனந்தமும் அடைய முடியும். தீமைகளைத் தவிர்த்து நன்மைகளைச் செய்து வந்தால் ஆசை அகன்று விடும் என்பது புத்தரின் நீதி போதனைகள். இப் பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் மணிமேகலை. மக்களிடையே பௌத்தசமய உணர்வினை மேலோங்கச் செய்யவும், பௌத்த சமயக் கொள்கைகளைப் பரப்பிடவும், அதனை நடைமுறையில் பின்பற்றவும் எழுந்த நூல் மணிமேகலை எனில் அது மிகையாகாது. இந்நூல் இளமை நிலையாமை,யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்ற மூன்று அறக்கருத்துக்களை அழுத்தமாக அடிக்கோடிட்டு காட்டுகிறது.*

**பாத்திரம் பெற்ற காதையில் பௌத்த சமய கருத்துக்கள்**

*போதி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் குற்றமற்ற புத்தர் பெருமானை வணங்கி குற்றங்கள் நீங்குமாறு போற்றி தீவதிலகை மணிமேகலைக்கு அறங்கள் உரைக்கத் தொடங்குவதாக கீழ்க்காணும் வரிகளில்,*

***“போதி நீழல் பொருந்தித் தோன்றும்***
***நாதன் பாதம் நவைகெட ஏத்தித்***
***தீவதிலகை சேயிழைக் குரைக்கும்”***[1]

*என்று சாத்தனார் பெருமான் குறிப்பிட்டுள்ளார். இவ்விடத்து புத்தர் தெய்வமாக வணங்கப்படுகின்றார். அறங்கள்கூறும்முன் இறைவனைவழிபட்டது மணிமேகலையிடம் உள்ள இறை நம்பிக்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இறைநம்பிக்கை என்பது ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் வழி தவறாமல் சரியான பாதையில் நடக்க உற்ற துணை புரிவதாக அமைகிறது. மனிதவாழ்விற்கு இறைநம்பிக்கை ஒரு தண்டவாளத்தைப் போன்றது என்றால் அதை மறுப்பதற்கில்லை. உண்மையான இறை நம்பிக்கை நற்செயல்களைச் செய்ய நம்மைத் தூண்டுகிறது. மேலும் இக்காதையில்*

***“தீவதிலகை தன்னடி வணங்கி***
***மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்***
***கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு “***[2]

*என்ற விடத்து இறைவன் மீது கொண்ட பக்தி வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். நம் நாட்டில் எந்த சமயமாக இருந்தாலும் அந்தந்த சமய வழிபாட்டுக்கு ஏற்ப தங்கள் இறைவன் மீது முழுநம்பிக்கை வைக்க வேண்டும் என்பது கோட்பாடாகவே அமைந்திருக்கிறது. மேற் சொன்னஅடிகளில் மணிமேகலை தீவதிலகையிடமிருந்து விடைபெற்று தன் ஊருக்குச் செல்லும் முன் தீவதிலகையை வணங்கி புத்தபெருமானது பீடிகையை வலம் வந்து தொழுத பின்னே மீண்டும் வான்வழியே தன் ஊருக்குப் புறப்படுகிறாள். இங்கு மீண்டும் புத்தரை வழிபடுவது போல் இக்காட்சி அமைகின்றது. இது மணிமேகலை புத்தபெருமான் மீது கொண்டிருக்கும் ஆழ்ந்த பற்றை வெளிக்கொணருகிறது.*

***“மாரனை வெல்லும் வீர நின்னடி***
***................................***
***உரகர் துயரம் ஒழிப்போய்நின்னடி”***[3]

*என்று கிட்டத்தட்ட 15 அடிகளில் புத்தபெருமானின் பெருமையை மணிமேகலையும் தீவதிலகையும் மாறிமாறி போற்றுகின்றனர். காமத்தை வென்ற வீரன்; தீ நெறி என்னும் கடும் பகையை விலக்கியவன்; அறத்தைப் பிறருக்கு உதவும் வகையில் செய்பவன்; இன்ப மேலுலகை விரும்பாதவன்; தன் எண்ணத்தை பிறர் நலத்தின் மீது மட்டுமே கொண்டவன்; என்றெல்லாம் புகழ்ந்து இறுதியில் இறைவனே உன்னை எங்களால் வணங்க முடியுமே தவிர வாழ்த்துதல் என்பது எங்கள் நாவுக்கு அடங்காது என்று குறிப்பிடுகின்றார். இறைவன் எண்ணிலடங்கா புகழினைத் தன்னகத்தேஉடையவன். அத்தகையவனை வணங்க மட்டுமே ஸ்தூல சரீர (கண்ணுக்குத் தெரியும்) ஆத்மத்தால் முடியும் என்பது சாத்தனாரின் வாக்கு.*

**பழம் பிறப்பின் இரகசியம்**

*மனிதர் ஒருவர் மீது ஒருவர் கண்டதும் அன்பு கொள்வதும் காரணம் இல்லாமல் வெறுக்க தோன்றுவதும் முற்பிறப்புகளின் விட்டகுறை தொட்ட குறையாகக் கருதப்படுகிறது. முற்பிறப்பு அனுபவங்கள் நமது மனதின் அடிநிலையில்* (Subconscious mind) *பதிந்து விடுகின்றபடியால் அவை சூட்சும (கண்ணுக்குத் தெரியாத) நிலையில் தம்மோடு கூடவே இருந்து கொண்டு நாம் எடுக்கும் பிறப்புகள் தோறும் தொடர்ந்து வருகின்றன. முற்பிறப்பு நினைவுகள் இயல்பாக நமக்கு இருப்பதில்லை. ஆழ்ந்த மற்றும் ஒழுங்கமைவு படுத்தப்பட்ட தியானத்தின் வாயிலாக கிடைக்கப்பெறும் சக்தியிலிருந்து மறுபிறப்புகளை அறியலாம். புத்தர் பெருமான் 'அங்குத்தற நிக்காயா' வில் இந்த யோகநிலையை எப்படி பெறுவது? என்று தனது சீடர்களுக்கு விளக்கியுள்ளதாக குறிப்புகள் காணப்படுகின்றன.*

*இன்றைய அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்த நிலையில் ஆழ்ந்த உறக்க நிலையில் பின்னோக்கிச் சென்று* (Hypnotic Regression) *முற்பிறப்புகளை அறிதல் சாத்தியம் என நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அறிதுயில் நிபுணர்* (Hypnotist) *தனது மனோ சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள நபரின் ஞாபகசக்தியை தான் விரும்புவதுபோல் 100, 200 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் செலுத்தித் தகவல்களைப் பெறுகிறார்கள் என்பது ஊடக செய்தியாக நாளிதழ்களில் அன்றாடம் வலம்வந்து கொண்டிருப்பது நாம் அறிந்த ஒன்றேயாம். தான் செய்த வினைகளுக்கு ஏற்ப உயிர்களுக்கு மறுபிறவி உண்டு என்பதில் பௌத்தசமயம் ஆழமான நம்பிக்கை கொண்டது. அதாவது நாம் நிச்சயமாக முற்பிறப்பின் பலாபலன்களை அடைவோம் என்ற செய்தி இக்காதையில் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது.*

***"விட்ட பிறப்பில் யான் விரும்பிய காதலன்***
***திட்டி விடமுணச் செல்லுயிர் போவுழி***
***உயிரோடு வேவே னுணர் வொழி காலத்து***
***வெயில்விளங் கமையத்து விளங்கித் தோன்றிய***
***சாது சக்கரன் றனை யானூட்டிய***
***காலம் போல்வதோர் கனா மயக்குற்றேன்***
***அங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்***
***ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகுந்தது"*** [4]

*மணிமேகலை முற்பிறப்பில் தன் கணவன் ராகுலன் அரவம் தீண்டி மாண்டுபோக அவனுடன் சேர்ந்து தானும் தீயில் குதித்து மாண்டாள். அத்தீயில் தம் உணர்வு அடங்கும் வேலையில் அவள் முன்னொரு சமயத்தில் சாது சக்கரன் என்ற முனிவருக்கு உணவளித்தது அவளுக்குக் கனவு போல் தோன்றியது. அந்த நினைவுடனேயே மணிமேகலை மாண்டாள். அதன் விளைவாக இப்பிறப்பில் அமுதசுரபி எனும் அட்சய பாத்திரம் அவள் கைக்கு வந்ததாக மணிமேகலை தீவதிலகையிடம் கூறுவது போல் இவ் வரிகள் இடம்பெற்றுள்ளன. அதேபோன்று முற்பிறப்பில் செய்த தீவினையால் இப்பிறப்பில் துன்பப்படுவோரையும் இக்காதையில் சாத்தனார் பெருமான் குறிப்பிடத் தவறவில்லை.*

***"துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து***
***வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி***

***வெயிலென முனியாது புயலென மடியாது***
***புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்***
***அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்''*** [5]

*இவ்வரிகளுனூடே முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனாக மக்கள் கிழிந்த கந்தல் ஆடைகளை அணிந்து, கடும்பசியால் அதிக துன்பப்பட்டு, வெயில் என்று வெறுப்படையாமலும் மழை என்று ஓர் இடத்தில் தங்காமலும் செல்வந்தர்கள் வீட்டு வாயிலில் பிச்சை எடுக்கும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆக,*

***''ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்''*** [6]

*என்ற இளங்கோவடிகளின் அறக்கருத்தும் இவ்விடத்து மெய்ப்பிக்கப்படுகிறது.*

**பசிப்பிணி**

*மனிதனிடம் 'போதும்' என்ற ஒற்றை சொல்லை உணவு உண்ணும் ஓர் இடத்தில் மட்டுமே செவிகுளிர கேட்க முடியும். தானங்களில் சிறந்த உயரிய தானமாக கருதப்படுவது 'அன்னதானம்' என்று கூறின் அது மிகையாகாது. உணவை பசியுற்றோருக்கு உவந்து வழங்குவதே அன்னதானத்தின் சிறப்பம்சமாகும். அன்னமிடுதலின் மேன்மையைப் பற்றி மணிமேகலையில் 'பாத்திரம் பெற்ற காதையில்' வலியுறுத்தப்பட்டுள்ளது.*

***''மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''*** [7]

*என்ற வரிகளின்வழி பசித்தோருக்கு உணவிடுதல் உயிரையே கொடையாக அளித்ததற்குச் சமமாக கருதப்படும் என்று கூறப்படுகின்றது. இறைவனுக்கு அடுத்து உலகில் உயிர்கள் பசித்திருக்கும் வேலையிலும் தக்க தருணத்தில் உணவளிப்போரே நமக்கு உயிர் கொடுத்தவர்கள் ஆகின்றனர் என்பது இவ்வரிகளின் வழி தெளிவாக அறிய முடிகின்றது.*

***''அரிது அரிது மானுடராய் பிறத்தல் அரிது''......***

*என்று கூறிய ஔவை பிராட்டி*

***''கொடிது கொடிது இளமையில் வறுமை கொடிது''.. ..***

*என்று அடிகோடிட்டுச் சென்றது ஈங்கு குறிப்பிடத்தக்கதாகும். மணிமேகலை காப்பியம் பசியினை 'பிணி' என்று வரையறுக்கிறது. வள்ளுவர் பெருந்தகை*

***''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்***
***சேரா தியல்வது நாடு''*** [8]

*என்ற குறளில் தீர்க்க முடியாத பசியும் அழிக்க முடியாத பிணியும் என்கிறார். பசியையும் பிணியையும் தனித்தனியே வள்ளுவர் வகுத்துரைக்க மணிமேகலை காப்பியம் இரண்டையும் ஒன்றிணைத்து 'பசிப்பிணி' என்றது இவ்விடத்து ஆராயதக்கதாகும். வள்ளுவத்திற்குப் பின் எழுந்த மணிமேகலையில் சாத்தனார் பெருமான் பசிப்பிணி என்று குறிப்பிட்டது ஏன்? பொதுவாக பிணி என்பது நோயினைக் குறிக்கும் சொல், எனில் 'கர்ப்பிணி' 'பிறவிப் பிணி' போன்ற சொற்களின் பின் ஒட்டான 'பிணி' என்பது எதைச் சார்ந்து நிற்கிறது? பெரும்பாலான அகராதிகள் 'பிணி' என்ற சொல்லுக்கு நிகரான நேர் சொல்லாக 'நோய்' என்ற பொருளை*

*வரையறுத்து காட்டுகின்றன. பிறவி என்பது பிணி தான் என்றாலும் பிறவி இல்லை என்றால் முக்தி எது? ஒரு பெண் கருவுறுதல் நிகழ்வு பிணி தான் எனினும் அது இன்றேல் பரம்பரை ஏது? ஆகையால் இவ்விடத்து பிணி என்றது மனிதர்களுக்குத் தேவையான ஒன்று என்பது புலனாகிறது. பசியும் பிணியாக இருந்தால்தான் மனிதனுக்கு உழைக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். தனக்கும் தன்னைச் சார்ந்தாருக்கும் பசியாகிய பிணி பீடிக்காதிருக்க மனிதனாகப்பட்டவன் உழைப்பின்பாற் செம்மை பட்டவனாக சிறப்படைய வழிகோலும்.*

***"மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை***
***தானம் தவர் உயர்ச்சி தாளாண்மை - தேனின்***
***கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல்***
***பசி வந்திடப் பறந்து போம்''*** [9]

*என்று பழம்பாடல் ஒன்று 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்று குறிப்பிட்டுள்ளது.*

*மணிமேகலையில்*

***"குடிபிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்***
***பிடித்த கல்விப் பெரும்புனை விடூஉம்***
***நாண் அணி களையும் மாண் எழில் சிதைக்கும்***
***..................................................................***
***பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்***
***இசைச் சொல் அளவைக்கு என் நா நிமிராது''*** [10]

*பசிப்பிணி எனும் பாவி என்ன செய்யும்? குடிபிறப்பு பெருமையை அழிக்கும். சிறப்புகள் எல்லாம் இல்லாமல் செய்யும். கல்வி என்னும் செல்வத்தை கைவிட்டு விடும். செய்யத்தகாதன செய்வதற்கு நாணும் பண்பினை விலக்கி விடும் என்றெல்லாம் பட்டியலிடுகிறது மணிமேகலை. மேலும் புல்லும் மரமும் புகையும் படி வெயில் சுட்டெரித்து உயிரினம் அழியுமாறு மழைவளம் குன்றியது. அப்பொழுது அரசு நிலையைத் துறந்து தவம் மேற்கொண்ட அருமறை அந்தணன் விசு வாமித்திரன் நிலமெல்லாம் திரியும்போது, பசியின் கொடுமை தாங்க முடியாமல் உண்ணத்தகாத நாயின் கறியை உண்ண முற்படும்பொழுது அதற்கு முன்னதாக அவ்வுணவை இந்திரனுக்குப் படைக்கத் தொடங்கினான். அதனைக் கண்ட மழையின் தெய்வம் இந்திரன் நாடு செழிக்க மழைபொழிய செய்கிறான் என்ற செய்தியை*

***"அரும்பசி களைய ஆற்றுவது காணான்***
***திருந்தா நாய் ஊண் தின்னுதல் உறுவோன்"''*** [11]

*என்ற அடிகள் மெய்ப்பித்து நிற்கின்றன.*

***"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்***
***குறியெதிர்ப்பை நீ துடைத்து"*** [12]

*என்கிறார் வள்ளுவர். இல்லாதவர்களுக்கு வழங்குவதே ஈகை பண்பாகும். மற்றவர்களுக்கு வழங்குவது என்பது ஏதோ ஒரு ஆதாயத்தை எதிர்பார்த்து வழங்கப்படுவதாகும். எனவே பசியால் வாடும் மக்களுக்கு உதவி செய்து நல்லறத்தை மேற்கொள்ளும் கடமை நம் அனைவருக்கும் உண்டு என்பதை சீத்தலைச்சாத்தனார்.*

***"ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்நெறி வாழ்க்கை"[13]***

*என்ற பறைசாற்றுகிறார். ஆகையால் தான் மணிமேகலை காப்பியம் இப்பசியை போக்கும் அருமருந்தாகிய அமுதசுரபியைக் கையில் ஏந்தியது போலும்.*

**அமுதசுரபி**

*அமுதசுரபி என்பது எடுக்க எடுக்க அன்னம் வளர்கின்ற சிறப்புத் தன்மையைப் பெற்ற பாத்திரம் ஆகும். இது முதலில் ஆபுத்திரனால் பெறப்பெற்று பின்னர் மணிமேகலையின் கைக்கு வந்ததாக இக்காப்பியம் குறிப்பிடுகிறது. அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபி ஆபுத்திரனிடமும் மணிமேகலையிடமும் எவ்வாறு வந்தது என்பதை இரு வேறு கதைகளின் மூலம் இக்காப்பியம் சுட்டிக்காட்டுகின்றது. மனித சமூகம் உணவு தேவைக்காக தொடர்ந்து அன்று முதல் இன்று வரை போராடி வருகின்றது. ஆதிகால கற்கால மனிதன் தனக்குத் தேவையான உணவினை இயற்கையாய் கிடைத்த கனி, காய், தேன் போன்றவற்றின் மூலம் பெற்றுக் கொண்டான். இயற்கையும் ஆதிகால மனிதனுக்குத் தேவையான உணவினை அள்ளி அள்ளி வழங்கியது. என்று மனித இனம் இயற்கையிலிருந்து விலகி, அதாவது இயற்கையில் இருந்து நேரடியாக பெற்ற உணவு என்பதற்குப் பதிலாக தனக்குத் தேவையானதைத் தானே உற்பத்தி செய்து உண்ண வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டபோது தான் உற்பத்தி முறையும் உணவு முறையும் வெவ்வேறாக மாற்றமடைந்தது. இம்மாற்றம் சமூகத்தில் சில மனிதர்களுக்கு உணவு இல்லாத சூழ்நிலைக்கு ஆட்பட செய்தது. ஆகையால் உணவுக்காகப் போராடும் சக்தியாகவே மனிதன் ஆக்கப்பட்டிருப்பது இன்றளவும் கண்கூடு.*

***"போதித் தலைவனோடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது'' [14]***

*என்று அமுதசுரபியானது வைகாசி மாதம் 13-ஆம் நாள் கோமுகி பொய்கையில் தோன்றும் என்றும் அது ஆபுத்திரன் கையிலேந்தி அறம் செய்த பாத்திரம் என்ற செய்தியும் மணிமேகலையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும்*

***"தொழுந்தகை மரபின் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை இன்றி மனமகிழ் எய்தி ..'' [15]***

*என்றது கோமுகி பொய்கையை வலம்வந்த மணிமேகலையின் கையில் அமுதசுரபி வந்து நின்றது. அதனைகண்ட மணிமேகலை அளவில்லாமகிழ்ச்சிகொண்டதாககுறிப்பிடப்பட்டுள்ளது.*

**முடிவுரை**

*'மணிமேகலையில் வாழ்வியல் விழுமங்கள்' என்ற இவ் ஆய்வு கட்டுரையானது கீழ்க் காணும் சில முடிவுகளைத் தருகிறது.*

1. *பிறவித் துயர் நீக்கி நிலையான பேரானந்தத்தை அடைவதற்கு வழிகாட்டுவது சமயங்களில் நோக்கமாகும்.*

2. *மறுபிறப்பினை உணர்ந்தவர்களுக்கு வீடுபேறு உரியது என்பது மணிமேகலையின் மூலம் உணர்த்தப்படுகிறது.*
3. *அமுதசுரபி போன்ற மீ ஆற்றல் கொன்ற பொருட்கள் பெருந்தவத்தின் மூலமே வழங்கப்படுகின்றன.*
4. *தேவாமிர்தம், கற்பகத்தரு, காமதேனு, அட்சய பாத்திரம் போன்றவை உணவுத் தேவையை எதிர்கொள்வதற்காக மனிதன் கண்டறிந்த புராணத் தீர்வுகள் ஆகும். இன்றைய காலத்தில் இவை போன்றவை இல்லை எனினும் பெரும்பாலான ஆலயங்களில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. மேலும் அரசியல் கட்சி தலைவர்கள், மக்கள் பிரபலங்கள் போன்றோரின் பிறப்பு - இறப்பு தினத்தை ஒட்டியும் ஆங்காங்கே அன்னதானம் நடைபெற்ற வண்ணம் உள்ளன. இருப்பினும் இவற்றில் ஏழைமக்கள் பயன்பெறுகின்றார்களா? என்பது தான் மிகுந்த கேள்விக்குறி. இத்திட்டங்கள் மக்களை உழைக்காமல் இளமையிலேயே சோம்பேறிகளாக்கி எதிர்வரும் சமூகத்திற்குப் பயன்படும் நல்லறிவை மழுங்கச் செய்கிறது. ஆகவே பயன்பாடு உடையவருக்கே பயன்படும் வகையில் இத்திட்டங்கள் அமைவது அனைவருக்கும் சாலப்பொருந்தும்.*

**மேற்கோள்கள்**


1. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 73- 75.*
2. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள்124- 126.*
3. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 61- 70.*
4. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 99- 106.*
5. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 109- 113.*
6. *சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள் - அடிகள்*
7. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 95- 96.*
8. *திருக்குறள்-734.*
9. *சு.ஆனந்தன் - இலக்கிய வரலாறு - பக்கம் எ : 68.*
10. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள்7 6- 81.*
11. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 86- 87.*
12. *திருக்குறள்- 221*
13. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 92- 94.*
14. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 43- 46.*
15. *மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்- அடிகள் 58- 60.*


## References


1. *Seethalaichathanar Adigal, Manimekalai, pp.73-75.*
2. *Thiruvalluvar, Thirukkural, 734.*